கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2024ம் வருடம் செப்டம்பர் மாதம் 21ம் தேதி சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.07/2024
இன்
அசல் வழக்கு எண்.100/2018
-----

A. ராமசந்திரன் ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர்/

மதுரை ஜில்லா மில்
தொழிலாளர்கள் சங்கம்(HMS)
அதன் பொது செயலாளர்
V.பாதர்வெள்ளை அவர்கள்
மூலமாக ... எதிர்மனுதாரர்/வாதி

இறுதியாக இம்மனு 09.09.2024ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/பிரதிவாதி/பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.K.கோபாலன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் கடந்த

04.12.2023ம் தேதியிட்டு பி.வா.சா.1 சாட்சியிடம் நடந்த குறுக்கு விசாரணையில் உள்ள சாட்சியத்தில் 16வது வரியிலிருந்து 33வது வரி வரை நீக்கறவு செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.</u>**

1.1) மனுதாரர்/பிரதிவாதி தனது மனுவில் வாதி தாவாச்சொத்தின் பூரண உரிமையாளர் மற்றும் உரிமை மூலம் உடையவர் என்று விளம்புகை பரிகாரம் கோரியும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எந்தவித உரிமையும் இல்லாத வாதி பொய்யான சங்கதிகளை கூறி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தனது தரப்பில் முறையான விளக்கங்கள் தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும்,

1.2) மேலும் மனுதாரர்/பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாணை செய்யப்பட்டு கடந்த 04.12.2023ம் தேதியில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அசல் வழக்கிற்கு சிறிதும் தொடர்பில்லாத, வழக்கின் சாராம்சங்களுக்கு தொடர்பில்லாத கேள்விகள் மனுதாரர்/பிரதிவாதியிடம் கேட்கப்பட்டதாகவும் அதனை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மறுத்து சாட்சியம் அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு மனுதாரர்/பிரதிவாதியிடம் கேட்கப்பட்ட கேள்விகளை நீக்கறவு செய்ய

வேண்டியது அவசியமாக இருப்பதாகவும் அவ்வாறு நீக்கறவு செய்வதற்கு எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்விதமான நியாயாமான ஆட்சேபனை இருக்க முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

1.3) நீக்கறவு செய்யப்படவேண்டிய பகுதிகள் 04.12.2023ம் தேதிய குறுக்கு விசாரணை 16வது வரியிலிருந்து 33வது வரியானது

**"சிவனாத் என்பவர் சீதாலட்சுமி மில்லில் நிர்வாகியாக இருந்தார் என்றால் சரிதான். அவர் நிர்வாகிய இருந்தபோது கொலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த கொலை வழக்கில் காவல்துறையினர் என்னை குற்றவாளியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் பொய்யாக சேர்த்துள்ளார்கள். அந்த வழக்கில் நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்னை குற்றவாளியாக சேர்க்கப்பட்டதால்தான் வாதி சங்கத்தில் இருந்து கிளைச்செயலாளர் பதவியில் இருந்தும், உறுப்பினர் பதவியில் நீக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தான் வாதி சங்கத்தில் இருந்து என்னை நீக்கினார்கள் என்றாலும், மத்திய சங்கத்தில் இரண்டு பிரிவுகளாக பிரிந்ததால் என்னை நீக்கினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.**

**எனக்கு கொடுத்த தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு தள்ளுபடி**

**செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு தண்டனை காலத்தை சிறையில் இருந்து அனுபவித்து முடித்தேன் என்றால் சரிதான்"**

என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி சார்ந்திருந்த சங்கம் இரண்டாக பிளவுப்பட்டதன் காரணத்தாலேயே இருதரப்பு நிர்வாகிகள் தரப்பில் ஒருவரையொருவர் கடந்த 1984ம் ஆண்டு நீக்கி கொண்டதாகவும் அதற்கு சிவநாத் கொலை வழக்கிற்கும் சிறிதும் சம்பந்தமும் தொடர்பு இல்லை என்றும், மேலும் சிவநாத் கொலையுண்டதாக சொல்லப்படும் ஆண்டு 1993 என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அவர்களது தரப்பு வாதுரைக்கு ஆதரவாக 1) Youth Hostels Association of India Vs. Dr.Harish K.Sayena, 2) Vivek Sharma Vs. Vani Sharma, 3) Desh Raj and Others Vs. Rohtas Singh and Thota Suryanaraya and Anr Vs. Kanumari Sitarama Bapiraju ஆகிய முன்தீர்ப்புகளை தாக்கல் செய்துள்ளார்கள்.

2.1) எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையில் எதிர்மனுதாரர்/வாதி மேற்படி சங்கத்தின் பொது காரியதரசி என்ற முறையில் அசல் வழக்கை மனுதாரர்/பிரதிவாதி மீது விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுதாரர்/பிரதிவாதியை எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மறுத்து சாட்சியம் அளித்துள்ளதாக தெளிவாக

ஒப்புக்கொண்டுவிட்டு, மனுதாரர்/பிரதிவாதி தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளை நீக்கரவு செய்யவேண்டி இருக்கிறது என்று தாக்கல் செய்துள்ள இம்மனுவானது எவ்வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும்,

2.2) மனுதாரர்/பிரதிவாதி 14.12.2023ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையின் 16வது வரியிலிருந்து 33வது வரி குறிப்பிட்டு மேற்படி வரிகளை நீக்கரவு செய்யவேண்டுமென பரிகாரம் கோரி இருப்பதாகவும், அவ்வாறு எதற்காக அந்த குறிப்பிட்ட வரிகளை நீக்கரவு செய்யவேண்டும் என்பதற்கு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தெளிவாக விளக்கங்களையோ, காரணங்களையோ மனுதாரர் குறிப்பிடவில்லை என்றும், மேலும், குறுக்கு விசாரணையின்போது கேட்கப்பட்ட கேள்விகளை வழக்கிற்கு சம்பந்தப்பட்டவையா இல்லை என்பது குறித்து நீதிமன்றம் முடிவு செய்தபின்னர் தான் சாட்சியிடம் அந்த கேள்விகளை கேட்க அனுமதிக்கும் என்றும், அவ்வாறு தான் மனுதாரரரிடம் மேற்படி கேள்விகள் கேட்கப்பட்டு அவர் அளித்த பதில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும், அவ்வாறு சாட்சியத்தின் குறிப்பிட்ட பகுதியை நீக்கரவு செய்யவேண்டி மனுதாரர் மனு தாக்கல் செய்திருப்பது நீதிமன்றத்தின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது என்றும்,

2.3) பொதுவாக சாட்சி விசாரணையின்போது சாட்சியிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு சாட்சி அளித்த பதில்கள் வழக்கிற்கு

தொடர்புடையதா இல்லையா என்பது குறித்து நீதிமன்றம் அவ்வழக்கில் தீர்ப்பு வழங்கும்போது தான் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்றும், அதன்படி மேற்படி கேள்விகள் வழக்கிற்கு தேவையா, இல்லையா என்பது குறித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு முன்பு தான் ஒரு தீர்வுக்கு வரமுடியும் என்றும், அதனை விடுத்து நீதிமன்றத்தில் தான் அளித்த சாட்சியத்தை தானே நீக்கரவு செய்ய சொல்லி மனு தாக்கல் செய்திருப்பதை இந்நீதிமன்றம் அனுமதிக்க கூடாது என்றும், அவ்வாறு இம்மனுவினை அனுமதித்தால் ஒவ்வொரு வழக்கிலும் சாட்சிகளிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்களின் வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்து விட்டு அதனை நீக்கம் செய்யவேண்டி மனு செய்வது வழக்கமாகிவிடும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3.1) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்தததில் மேற்படி மனுதாரர் மனுவில் கூறியுள்ள **"சிவனாத் என்பவர் சீதாலட்சுமி மில்லில் நிர்வாகியாக இருந்தார் என்றால் சரிதான். அவர் நிர்வாகிய இருந்தபோது கொலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த கொலை வழக்கில் காவல்துறையினர் என்னை குற்றவாளியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் பொய்யாக சேர்த்துள்ளார்கள். அந்த வழக்கில் நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்னை**

**குற்றவாளியாக சேர்க்கப்பட்டதால்தான் வாதி சங்கத்தில் இருந்து கிளைச்செயலாளர் பதவியில் இருந்தும், உறுப்பினர் பதவியில் நீக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தான் வாதி சங்கத்தில் இருந்து என்னை நீக்கினார்கள் என்றாலும், மத்திய சங்கத்தில் இரண்டு பிரிவுகளாக பிரிந்ததால் என்னை நீக்கினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.**

**எனக்கு கொடுத்த தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு தண்டனை காலத்தை சிறையில் இருந்து அனுபவித்து முடித்தேன் என்றால் சரிதான்"**

என்று கூறப்பட்டுள்ள மேற்படி சங்கதிகள் குறித்து எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த பிராதிலோ ஆவணங்களிலோ அல்லது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலோ ஆவணங்களிலோ எதுவும் காணப்படவில்லை. மேலும் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகள் இவ்வழக்கு பிரச்சனையை தீர்மானிப்பதற்கு அவசியம் இல்லாத கேள்விகளாக குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் குறித்த எவ்வித வாதுரைகளும் பிராதிலோ பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில்

இல்லாத நிலையில் மேற்படி குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட மேற்படி பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களானது நீக்கம் செய்யப்பட வேண்டியவையா என்று பரிசீலிக்கையில்,

**1) Shrinivas Raghavendrarao Desai (Dead) by Lrs.**

**Vs,**

**Kumar Vamanrao @ Alok and ORS**
**C.A.No.7293-7294 of 2010**
**Dated:04.03.2024 (2024 3 S.C.R. 46)**

.... என்ற மாண்பமை இந்திய உச்சநீதிமன்ற வழக்கில் பத்தி 15ல்,

"There is no quarrel with the proposition of law that no evidence could be led beyond pleadings."

.. என்று கூறப்பட்டுள்ளது. மேலும்

**2) Devaraji Vs Poonurangam**

**S.A.No.325 of 2008**
**and**
**MP No.1 of 2008**
**Dated:11.03.2009**

என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கில் பாரா 11ல்

".... 11. It is a common or garden Principle of law that any amount of evidence without pleadings should be eschewed. Here, there are neither pleadings nor evidence in support of the fact that the suit property was kept as such for common enjoyment in the oral partition.

... என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு நீதிமன்றங்களில் கூறப்பட்ட முன்தீர்ப்புகளின் அடிப்படையில் No pleading No evidence என்ற

சட்டக்கோட்பாட்டின்படி வழக்கிற்கு சம்பந்தமில்லாத வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதிகளை பொறுத்து மனுதாரர்/பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் மேற்படி மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ள சாட்சியம் குறித்து பி.வா.சா.1 சாட்சியத்திலிருந்து நீக்கம் செய்யப்படவேண்டியது சட்டப்படியானது என்று நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, இம்மனுவினை அனுமதிப்பது நீதியின் நலன்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 20.09.2024ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2024.09.21 17:02:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு**:-
**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2024.09.21 17:02:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.07/2024
அசல் வழக்கு எண்.100/2018
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 21.09.2024